

புதுக்கோட்டைவடக்குமாவட்டதி.மு.க.மற்றும்மாவட்டவிளையாட்டுமேம்பாட்டுஅணிசார்பில்கழகதலைவர்தமிழ்நாடுமுதலமைச்சர் அவர்களின் 72 வது பிறந்தநாளை முன்னிட்டு கீரனூர் அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி மைதானத்தில் நடைபெறும் மாபெரும் தொடர்கிரிக்கெட்போட்டியை மாவட்டகழகசெயலாளர்வழக்கறிஞர்சே.கே.செல்லபாண்டியன்தலைமையில் மாவட்டசெயலாளர், அமைச்சர் எஸ்.ரகுபதி தொடங்கி வைத்து வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசுகளை வழங்கினார். நிகழ்வில் வி.ஜி.ஆர். மணிவண்ணன், எம்.ரமேஷ், சாங்கிராப்பட்டி ரவி, டாக்டர் பன்னீர்செல்வம், அசோக்குமார், கே.ஆர்.என்.போஸ், செ.அசோக் பாண்டியன், த.செல்லம், ஓ.எஸ்.வெங்கடாசலம், ஆர்.ஆர்.சாமிநாதன் ஜெ.அசரப் அலி, ஆ.ராஜேந்திர சோழன், கே.எம்.கே. ரவிக்குமார், எம்.ஏ.எம்.இம்தியாஸ், கே.ஆர்.பாலமுத்து உள்ளிட்டோர் உடனிருந்தனர்.



திருப்பூர் மாநகராட்சி, வித்யா கார்த்திக் திருமண மண்டபத்தில் மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு கடனுதவிக்கான காசோலையினை தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர், திருப்பூர் கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் மு.பெ.சாமிநாதன் வழங்கினார். இதில் மாவட்ட ஆட்சித்தலைவர் தா.கிறிஸ்துராஜ், திருப்பூர் தெற்கு சட்டமன்ற உறுப்பினர், மத்திய மாவட்டப் பொறுப்பாளர் க.செல்வராஜ், மாநகராட்சி மேயர், வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் ந.தினேஷ்குமார், திட்ட இயக்குநர் (மகளிர் திட்டம்) சாம்சாந்தகுமார், வடக்கு மாநகர பொறுப்பாளர், மேட்டுப்பாளையம் சட்டமன்ற தொகுதி பார்வையாளர் ஈ.தங்கராஜ், மாவட்ட துணை செயலாளர், ஒன்றியக்குழு முன்னால் பெருந்தலைவர் வழக்கறிஞர் எஸ்.குமார், பகுதி கழகச் செயலாளர்கள் மேங்கோ அ.பழனிச்சாமி, மு.க.உசேன், பொங்கலூர் மேற்கு ஒன்றியச்செயலாளர் ஜேசிபி எஸ்.பாலுச்சாமி உள்பட பலர் கலந்து கொண்டனர்.



நீலகிரி மாவட்டம் குன்னூர் பகுதியில் யானை தாக்கி உயிரிழந்த விஜயகுமார் என்பவரின் குடும்பத்தாரிடம் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சார்பில் அனுதாபத்தை தெரிவித்த அரசின் தலைமைக் கொறாடா கா.ராமச்சந்திரன், அரசின் நிவாரணத் தொகையை வழங்கினார்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! சொ.வேலு தலைமை! சென்னை கிழக்கு மாவட்டம் –

# எழும்பூர் வடக்குப் பகுதியில் முதல்வரின் மனிதநேய விழா - புகழரங்கம்!

### ஈ.ஆர்.ஈஸ்வரன் எம்.எல்.ஏ. – எஸ்.ராஜேஷ்குமார் எம்.எல்.ஏ. சிறப்புரையாற்றினர்!

சென்னை, மார்ச் 12-

சென்னை கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மக்கள் முதல்வரின் மனித நேய விழாவை முன்னிட்டு, மனிதநேயம் 16, பொன்னுக்கு படைக்கும் தலைமை! பூபாள விடியலின் புதுமை!! எனும் தலைப்பில் எழும்பூர் வடக்கு பகுதியில் மாபெரும் புகழரங்கம் 10.03.2025 திங்கள் அன்று மாலை 6.00 மணியளவில், சென்னை, புரவைவாக்கம், தானா தெருவில் நடைபெற்றது.



இப்புகழரங்கத்தில் எழும்பூர் வடக்கு பகுதி செயலாளர் சொ.வேலு தலைமை வகித்தார். சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத் துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர் பாபு, வி.சுதாகர், பி.எம். யாழினி, கோ.ஏகப்பன், கே.எஸ்.எம்.நாதன், எஸ். மணிமுடி, கோ. மணி, புனி தவதிளத்திராசன், சரிதா மகேஷ்குமார், ராஜே ஸ்வரி ஸ்ரீதர், எல்.சந்தர்ராஜன், பரிதிஇளம்சுருதி, பாத்திமா முசாஃபர், அ.நிர்மலாதேவி, ஜி.தாமோ தரன், க. வினோத் முன்னிலையில், "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி, பொதுச்செயலாளர் ஈ.ஆர். ஈஸ்வரன், எம்.எல்.ஏ, காங்கிரஸ் சட்டமன்ற தலைவர் எஸ்.ராஜேஷ்குமார், எம்.எல்.ஏ ஆகியோர் சிறப்புரையாற்றி னர்.

மேலும், இப்புகழரங்கத்தில் சென்னை பெருநகர மேயர் பிரியா ராஜன், கே. எஸ்.ரவிச்சந்திரன், மாவட்ட நிர்வாகிகள்: கோ.ஏகப்பன், ஜி.எம்.தேவன், எம்.சாமி கண்ணு, கூ.பீ.ஜெயின், எஸ். முரளி, க.நந்தீஸ்வரன், சுதா தீனதயாளன், ராஜேஸ்வரி ஸ்ரீதர், சாந்தகுமாரி, ஜி.வி. நாகவள்ளி, வானவில் விஜய், பி.உதயசங்கர், இரா. வீரமணி, ஜி.தாமோதேரன், எம்.பெரோஸ்கான், வி.விஜயகு மார், ஆர்.எஸ்.சித்திக், ம.அசோக்குமார், ப.பிரதீப் குமார், எல்.சம்பத்குமார், டி.வி.செம்மொழி, இரா. கலைச்செல்வி, எஸ்.தமிழ் செல்வி, எம்.சரவணன், இந்திரஜித், கனல் கங்கா, லண்டன் முருகன். எழும்பூர் வடக்கு பகுதி / தெற்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள்: தி.தயாளன், வி. அபாய், ஆர்.எம்.ரங்கநாதன், எம்.சேகர், வி.விஜயகுமார், ஆர்.பாபு, டால்பின் எஸ். அரிகிருஷ்ணன், இ.மொய்தீன், வான்மதி கதிரவன், எல்.சுந்தர்ராஜன் மற்றும் மாவட்ட கழக, பகுதி, வட்ட கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக மூத்த முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

வட்ட கழக செயலாளர் சு.மனோகரன், ந.பாலு நன்றி கூறினார்கள்.

### கழகத் தலைவர் – முதல்வர் மு.க.ஸ்டாலின் பிறந்தநாளையொட்டி

# அன்னம் தரும் 'அமுதக் கரம்' 19-வது நாள்!

### துறைமுகம் கிழக்குப் பகுதியில் – அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்!

சென்னை, மார்ச் 12-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், கழக தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு, வெவ்வேறு இடங்களில் அன்னம் தரும் அமுதகரங்கள் சிறப்புமிகு திட்டத்தின் 19வது நாள் துறைமுகம் கிழக்கு பகுதியில் - இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு உணவு வழங்கினார்.

முதலமைச்சர் அவர்களின் 72வது பிறந்த நாளை முன்னிட்டு சென்னை கிழக்கு மாவட்ட திமுக சார்பில், 2025 பிப்ரவரி 20ஆம் தேதி முதல், 2026 பிப்ரவரி 19ஆம் தேதி வரையிலான 365 நாட்களும், நாள் ஒன்றுக்கு 1000 நபர்களுக்கு காலை உணவு வழங்கும் சிறப்புமிகு "அன்னம் தரும் அமுதக்கரங்கள்" மாபெரும் திட்டத்தின் 19 ஆம் நாளான - கழகத்தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவக்ளின் இனிய பிறந்த நாளில் நேற்று முன்தினம் (10.3.2025) துறைமுகம் கிழக்கு பகுதி 1) நாராயண அப்பன் தெரு, கலெக்டர் ஆபிஸ் பின்புறம், சென்னை (60வது வட்டம்) 2) வரதராஜன் தெரு, கிளைவ் பேட்டரி சென்னை ஆகிய பகுதிகளில் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு "தமிழ்நாட்டு நலன்களையும், எதிர்காலத்தையும் யாருக்காவும், எதற்காகவும் விட்டுத்தரமாட்டோம். தமிழ்நாட்டின் உரிமைகளுக்காக ஒன்றுபட்டு போராடுவோம். தமிழ்நாடு போராடும், தமிழ்நாடு வெல்லும் - இதுதான் ஒரே இலக்கு!" என்ற உறுதிமொழியை ஏற்று பொதுமக்களுக்கு காலை உணவு வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் எஸ். முரளி, எஸ்.இராஜசேகர், பி. ஸ்ரீராமுலு, ஜி.எம்.தேவன், எம்.விஜயகுமார், என்.பி.எம். ஷேக்அப்துல்லா, இப்ராஹிம் கனி, ஆர்.கலைச்செல்வி, பி. விஜயகுமார், எல்.சம்பத்குமார், பா.பிரதாப்குமார், எம். விநாயகம், ப.ஜெகதீஷ் துறைமுகம் கிழக்கு/மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன், எல். சத்தியநாராயணன், மற்றும் கழக நிர்வாகிகள் முன்னோடிகள் கலந்து கொண்டனர்.

### பிரதான் மந்திர் ஷிரம் யோகி மான் திட்டத்தில்

# தமிழ்நாட்டில் பயன்பெற்றவர்கள் எத்தனை பேர்?

### மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி

புதுடெல்லி, மார்ச் 12-

கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் பிரதான் மந்திரி ஷிரம் யோகி மான் திட்டத்தால் பயன் பெற்ற தொழிலாளர்கள் எத்தனை பேர் என தருமபுரி எம்.பி.ஆ.மணி நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பினார்.



நடைபெற்று வரும் நாடாளுமன்ற கூட்டத் தொடரில் தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர்.ஆ.மணி பிரதான் மந்திரி ஷிரம் யோகி மான் திட்டம் (PMSYM) குறித்து சராமரியான கேள்விகளை எழுப்பினார்.தமிழ்நாட்டில் இந்த திட்டம் தொய்வு பெற்ற நிலையில் உள்ள காரணம் என்ன?

இத்திட்டத்தை ஒன்றிய அரசு சரியான முறையில் இயக்கி வருகிறது எனில் கடந்த 3 ஆண்டுகளில் தமிழ்நாட்டில் இந்த திட்டத்தால் பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்?

தருமபுரி மாவட்டத்தில் இருந்து மட்டும் இந்த திட்டத்தால் பயன் பெற்றவர்கள் எத்தனை பேர்? என்று தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு துறை அமைச்சர் சுஸ்ரிசோபா கரண்ட்லஜே விடம் நாடாளுமன்றத்தில் வழக்கறிஞர்.ஆ.மணி கேள்வி எழுப்பினார்.



நாடாளுமன்றத்தில் தமிழக எம்.பி.க்களை தரக்குறைவாக பேசிய ஒன்றிய கல்வித்துறை அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து நாகையில் கழக செயலாளர் என்.கௌதமன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.உடன் மு.லோகநாதன், இரா. மாரிமுத்து எம்.ஆர். செந்தில்குமார், ஆர். ஏ.டி அண்ணாதுரை, எஸ். பால்ராஜ், பெ.முருகானந்தம், ஆர். ஆர் குலோத்துங்கன் தினேஷ்குமார், சிக்கல் என்.ஆனந்த் திருநாவுக்கரசு, வெற்றிலை கடை சிவா, பி.திலகர், சித்ரா குலோத்துங்கன், அபுபக்கர், ஆர்.எஸ். சத்தியன், பிரதீப், சரவணன், கறிகடை பாண்டி, நிஜாம் மற்றும் பலர் உள்ளனர்.





தமிழ்நாட்டிற்கு வழங்க வேண்டிய கல்வி நிதியை தர மறுக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்து தமிழ்நாடு தொடக்கப்பள்ளி ஆசிரியர் மன்ற மாவட்ட செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. புதுக்கோட்டையில் நடந்த இக்கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் முனைவர் நா.சண்முகநாதன் தீர்மானங்களை விளக்கிப் பேசினார்.

# மாதவரம் வடக்கு பகுதி தி.மு.க. சார்பில் தண்ணீர் பந்தல் திறப்பு!

மாதவரம், மார்ச் 12-

சென்னை வடகிழக்கு மாவட்டம், மாதவரம் பகுதி திமுக சார்பில் தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர் அவர்களின் ஆணைப்படி, கோடை வெயிலின் தாக்கத்தை குறைக்க பொதுமக்களுக்கு தண்ணீர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் ஏற்பாட்டில்,17 வது வட்டம் சின்ன தோப்பு வடபெரும்பாக்கம் பகுதியில் அமைந்துள்ள பேறறிஞர் அண்ணாவின் திருவுருவ சிலைக்கு எதிரே, ஆட்டோ ஓட்டுனர்கள், பொதுமக்கள் பயன்படுத்தும் வகையிலும், பேருந்து நிலையம், வாகன ஓட்டிகளுக்கு வசதியாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தண்ணீர் பந்தல் திறந்து வைக்கப்பட்டது.

17 வது வட்டச் செயலாளர் கே. கருணாகரன் முன்னிலையில், வட்ட நிர்வாகிகள் சி. பாலாஜி, சி. மூர்த்தி, மாவட்ட விவசாய தொழிலாளர் அணி துணை அமைப்பாளர் கே. சண்முக பிரியன், பகுதி இளைஞரணி துணை அமைப்பாளர் எம். என். அஜய் தென்னவன், மாவட்ட விவசாய அணி துணை அமைப்பாளர் டி. வினோத், ஜி, ராஜ்குமார், பாக முகவர்கள் என். நாகராஜன், டி. திவாகர்,வி. சுமீர், ஜி. கார்த்திக் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

பொதுமக்கள் பயன்பெறும் வகையில் தண்ணீர் பந்தலில் தர்பூசணி, இளநீர், வெள்ளரிக்காய், மாதுளம் பழம், பனங்காய் மற்றும் குளிர்பானங்கள் ஆகியவை பொதுமக்களுக்கு வழங்கப் பட்டது.

500க்கும் மேற்பட்ட பொதுமக்களும் வாகன ஓட்டிகளும் தங்களது தாகத்தை தணித்துக் கொண்டார்கள். தொடர்ந்து தினந்தோறும் இந்த இடத்தில் நீர் மோர் மற்றும் குளிர்பானங்கள் வழங்கப்படுகிறது.

நிகழ்ச்சியில் தீயம்பாக்கம் எம். ஜான்சன், இ. சுதர்சன்,ஜி. பூபாலன், வடபெரும்பாக்கம் பி. செந்தில், எம். மைக்கேல், எம். கோவிந்தன், ஜி. முனிவேல், செல்வம் எஸ் .கமலநாதன், வழக்கறிஞர் எம். என். தளபதி, கே. சாந்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டார்கள்

தண்ணீர் பந்தல் திறப்புக்கான ஏற்பாட்டை மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் செய்திருந்தார்.

தமிழ்நாட்டையும் தமிழ்மக்களையும் விமர்சித்த ஒன்றிய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்தும், தமிழ்நாட்டை வஞ்சிக்கும் ஒன்றிய அரசைக் கண்டித்தும் பொதுமக்களிடம் துண்டு பிரசுரம் விநியோகிக்கும் நிகழ்வும், தர்மேந்திர பிரதான் உருவபொம்மை எரிக்கும் நிகழ்ச்சியும் திருவாரூரில் மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ. தலையில் முத்துப்பேட்டை பிரதான கடை வீதியில் நடைபெற்றது.



புன்செய்ப் புளியம்பட்டியில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்தநாளையொட்டி நகர சார்பில் நகரச் செயலாளர் – பி.ஏ.சிதம்பரம் தலைமையில் மருத்துவ முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக முன்னோடிகளும், மாநில, மாவட்ட, நகர நிர்வாகிகளும், நகர்மன்ற உறுப்பினர்களும், கழக உடன்பிறப்புகளும், இளைஞரணி, மகளிரணி, மாணவரணி, சார்பு அணியினரும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.